Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 24/2023

**2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | வீட்டுகுடித்தனம் |
| பெயர் | - | பிரவீனா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | மதன் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | எம்.ஜி.ஆர். நகர் | வயது | - | 35 |
| சாதி | - | - | | | |

**17.10.2023**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை** :

1. நான் வால்பாறை எம்.ஜி,ஆர் நகரில் வசித்து வீட்டு குடித்தனம்செய்து வருகிறேன். கடந்த 05-02-2023 அன்று இரவு 7.00 மணியளவில் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள அ.சா.1 சபரிகார்த்திக் வீட்டிற்கு பக்கத்தில் நானும், நந்தினி, திவ்யா மூவரும் நின்று பேசிக்கொண்டு இருந்தோம்.

2. அப்போது ஆஜர் எதிரி வின்சென்ட் குடிபோதையில் வந்து ஏன்டீ தேவிடியா முண்டைகளா வெளில நின்னு உங்களுக்கு என்ன பேச்சு என்று சத்தம் போட்டுக்கொண்டு இருந்தார். இதை கேட்ட சபரிகார்த்திக் அண்ணன் ஏன்டா பொம்பளைங்கள அசிங்கமா பேசுற அப்படினு கேட்டார். என்னையவே நீ கேள்வி கேட்கிறீயாடா தாயோலி மவனே என்று சபரியை பார்த்து ஆஜர் எதிரி சொன்னார்.

3. நான் எப்பவேனாலும் குடிக்கிறதற்கு காசு கேப்பேன் தரலனா உன் பாக்கெட்ல இருந்து பணத்தை எடுப்பேன். உன்னை கல்லை எடுத்து அடிச்சு கொல்லாமல் விடமாட்டேன். உன் குழந்தைகளையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார். கல்லை எடுத்து வீச வந்தார். அப்போது என் கணவர் மதன் பக்கத்தில் இருந்த மணிக்குமார் வந்ததும் கல்லை போட்டுவிட்டு உள்ளே ஓடிவிட்டார். இது அப்ப நடந்த சம்பவம்.

4. அதற்கு அப்புறம் இரண்டு மாசத்திற்கு அப்புறம் நீங்க கேஸ் கொடுத்தனாலதான் நான்

ஜெயிலுக்கு போனேன் கேசை வாபஸ் வாங்கனும் இல்லனா உங்களை நிம்மதியா இருக்கவிடமாட்டேன். யாரையும் தூங்க விடமாட்டேன் என்று ஆஜர் எதிரி சொன்னார். என்னுடைய வீட்டுக்காரர் இல்லாத நேரத்தில் என்கூட படுக்க வாடி என்று ஆஜர் எதிரி கூப்பிட்டார். உள்ள ஜட்டி போட்டு இருக்கியா இல்லையா உன்னோட உள் உறுப்ப தொட்டு பார்க்கனும் ஷேவ் பண்ணிக்கியா என்று தொட்டுப்பார்க்கனும் என்று ஆஜர் எதிரி சொன்னார். ( சாட்சி மேற்கண்ட வார்த்தையை சொல்லிவிட்டு சாட்சி கூண்டில் கண்கலங்கினார் என்பதை நீதிமன்றம் பதிவு செய்கிறது.) இதை கேட்ட 9-ம் வகுப்பு படிக்கும் என் பையனும், 6-வது வகுப்பு படிக்கும் என் பொண்ணும் என் அம்மாவை எல்லோரும் முன்னாடியும் கேவலமாக பேசிவிட்டானே என்று மன உளைச்சலுக்கு ஆளாகிவிட்டார்கள். சரியாக படிக்க இயலவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ,செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை